NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலம் ஆண்டின் 16 ஆம் ஞாயிறு | 20 ஜூலை 2025

எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்

மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்:

சூழலியல் பணித்துவம்

வளங்கள் களவாடப்படுவதையும் சுரண்டப்படுவதையும் தடுத்திட அழைப்பு

# தீவிர விருந்தோம்பல் மற்றும் சுற்றுச்சூழல் பராமரிப்பு: செயல்படுத்த அழைப்பு

நற்செய்தியில் காணப்படும் இரண்டு பிரபலமான சகோதரிகளான மார்த்தா மற்றும் மரியா சீடத்துவத்தின் இரண்டுவிதமான பாதைகளை எடுத்துக்காட்டுகின்றனர். மார்த்தாவின் சுறுசுறுப்பான சேவை மற்றும் மரியாவின் ஆழ்ந்து தியானிக்கும் பக்தி. பெரும்பாலும் முரண்பாடாக சித்தரிக்கப்பட்டாலும் இரண்டு நிலைகளும் நம்பிக்கையின் முக்கிய வெளிப்பாடுகள். இருப்பினும் மார்த்தா குறைவாக விரும்பப்படும் கதாபாத்திரமாகக் காணப்படுகிறார். ஆனால் இயேசுவை தனது இல்லத்திற்கு வரவேற்றவர் அவர்தான். அவருடைய விருந்தோம்பல் இயேசுவுக்கு ஒரு புனிதமான இடத்தை உருவாக்கியது. மேலும் மரியாவின் கவனமான செவிமடுப்பு அவருடனான சந்திப்பை ஆழப்படுத்தியது.

மார்த்தா இயேசுவிடம் வந்து புகார்செய்தபோது, யேசு அவரைஅமைதியாக இருக்கவும், கவனச்சிதறலில் இருந்து கவனமாய் இருக்கவும் மென்மையாக அழைப்பு விடுக்கிறார். கவனத்துடன் இருக்கவும் கடவுளுக்கு செவிகொடுக்கவும் நேரம் ஒதுக்குவது மிகவும் நல்ல பங்கு. இந்த ஆற்றல் நமது ஆன்மீக வாழ்க்கையில் நம்முடைய செயல்களுக்கும் சிந்தனைக்கும் இடையிலான சமநிலையைப் பிரதிபலிக்கிறது.

இன்று சுற்றுச்சூழல் பராமரிப்பாளர்களின் எல்லைக்குள் இந்த சமநிலையை விரிவுபடுத்த திருஅவை அழைக்கப்பட்டுள்ளது. ஆபிரகாம் தனது விருந்தினர்களை ஆர்வத்துடன் வரவேற்றதன் மூலம் எடுத்துக்காட்டும் விருந்தோம்பல், ஒவ்வொரு நபரிலும் படைப்பிலும் கிறிஸ்துவை அங்கீகரிக்க நம்மை அழைக்கிறது. இந்த அங்கீகாரம் சுற்றுச்சூழலின் மீது இரக்கத்துடனும் பொறுப்புடனும் செயல்பட நம்மைத் தூண்டுகிறது. அதை ஒரு புனிதமான நம்பிக்கையாகக் கருதுகிறது

திருத்தந்தை பிரான்சிஸ் எழுதிய லாவ்டாதோ சி என்னும் சுற்றுமடல் இந்த இரண்டும் ஒன்றோடொன்று இணைந்திருப்பதை வலியுறுத்துகிறது. நமது பொது இல்லமான பூமியைப் பராமரிக்க இது வலியுறுத்துகிறது. அவர் நுகர்வோர் கலாச்சாரத்தையும் சுற்றுச்சூழல் சீரழிவைப் பற்றியும் நீதி மற்றும் ஒன்றிப்பில் வேரூன்றிய உலகளாவிய மறுமொழிக்கு அழைப்பு விடுக்கிறார். இந்த சுற்றுமடலினால் ஈர்க்கப்பட்ட லாவ்டாதோ சி இயக்கம் உலகெங்குமுள்ள கத்தோலிக்கர்களை பசுமை திருஅவையினராக ஊக்குவித்து, காலநிலை சமத்துவத்திற்காக வாதிடுவதுவரை சுற்றுச்சூழல் நடவடிக்கைகளில் ஈடுபட அணிதிரட்டுகிறது.

சுற்றுச்சூழல் பராமரிப்பில் தீவிர விருந்தோம்பலை இணைப்பது என்பது அனைத்துப் படைப்புகளின் கண்ணியத்தையும் அங்கீகரித்து,அன்பு மற்றும் செயல்படுத்துவதுடன் மறுமொழி கொடுப்பதாகும் இது மக்கள் மற்றும் வாழும் பூமி இரண்டும் செழித்துவளரக்கூடிய இடங்களை உருவாக்குவதை உள்ளடக்கியது. இன்றைய நமது செயல்கள் எதிர்கால சந்ததியினரின் நல்வாழ்வை சமரசம்செய்யாமல் இருப்பதை உறுதி செய்கிறது.

மார்த்தா மற்றும் மரியாவின் முன்மாதிரியைப் பற்றி நாம் சிந்திக்கும்போது, சுற்றுச்சூழல் பாரமரிப்பிற்கான நமது அணுகுமுறையில் துடிப்பான செயல் மற்றும் சேவையில் ஆழ்ந்த செவிமடுத்தல் இரண்டையும் உள்ளடக்கியதாக இருக்க நாம் பாடுபடுவோம். அவ்வாறு செய்வதன் மூலம் படைப்பின் புனிதத்தை நாம் மதிக்கிறோம். மேலும் கடவுள் மற்றும் அவர் நம்மிடம் ஒப்படைத்த உலகம் இரண்டையும் அன்பு செய்து சேவை செய்வதற்கான நமது அழைப்பை நிறைவுசெய்கிறோம். ❖

அன்னியரை வரவேற்று விருந்தோம்ப மறவாதீர்கள். இவ்வாறு விருந்தோம்பியதால் சிலர் தாங்கள் அறியாமலே வானதூதர்களை மகிழ்ச்சிப்படுத்தியதுண்டு (எபிரேயர் 13:2)

## இன்றைய இறைவார்த்தை:

தொடக்கநூல்: 18:1-10

திருப்பாடல்: 15: 2-5

கொலோசையர்: 1: 24-28

லூக்கா 10: 38-42

INTERNAL CIRCULATION ONLY
BUL 29/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org